# 2015 – 2016

கர்மவீரர் காமராசர் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ் மன்றத்தின் சார்பாக ‘காமராசர் ஒரு காலப்பெட்டகம்’ என்ற தலைப்பில் பேச்சுப்போட்டியும் ‘இனியொரு விதி செய்வோம்’ என்ற தலைப்பில் கவிதைப் போட்டியும் 07.07.2015 செவ்வாய்க்கிழமையன்று நடத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் தமிழ் மன்றத் தொடக்க விழா 15.07.2015 புதன்கிழமையன்று நடைபெற்றது. விழாவின் சிறப்பு விருந்தினராக அமுதசுரபி இதழாசிாியர் முனைவர் திருப்பூர் கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் ‘சங்கச்சித்திரம்’ நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டது.

மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் நோக்கில் ‘சொல்லும் செயலும்’ என்ற தலைப்பில் மாணவர்களுக்கு கவியரங்கம் 03.09.2015 வியாழக்கிழமையன்று நடைபெற்றது. இதில் 20 – க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர்.

கோயமுத்தூர் கம்பன் கழகம் நடத்தும் கல்லூரி மாணவர்களுக்கான ‘சுழலும் சொல்லரங்கம்’ 19.10.2015 திங்கட்கிழமையன்று நடைபெற்றது. இந்த சொல்லரங்கத்தில் வெற்றி பெற்ற நா.ஸ்ரீமதி மற்றும் ம.சிந்துஜா இருவரும் கோவை மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கிடையேயான சொல்லரங்கில் கலந்து கொள்ள தேர்வாகினர்.







